# குளித்தலை நகராட்சி

28.02.2020.ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ)
குளித்தலை நகராட்சி.

-------

**பொருள்– 01.** குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5370 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிசான்று 19.02.2020.ல் முடிவடைவதால், அதனை புதுப்பிக்க பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு உதிரிபாகங்கள் மாற்றம் செய்யவேண்டி உள்ளது. அதற்கான உத்தேச செலவின மதிப்பீடு ரூ.1.10 லட்சத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2855/2019/எச்1)

**பொருள்– 02.** குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-F-1522 என்ற எண்ணுள்ள கழிவுநீர் வாகனத்திற்கு தகுதிசான்று பெறுவதற்கு பழுதுநீக்கம் செய்ய நாள்–31.12.2019.ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | செலவினம் |
|---|---|---|
| 1) | Lakshmi Auto Diesel Works, Government Approved Workshop Corner, Metturdam, Pin-636 401. | ரூ.126950/– |
| 2) | JVK Auto Diesel Works, JVK Campus, Kalarmpatty mainroad, Salem, Pin-636 015. | ரூ.136100/– |

**அலுவலக குறிப்பு–** 1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). இந்நகராட்சி பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள Lakshmi Auto Diesel Works நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் பட்டியல்படி தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2581/2019/எச்1)

**பொருள்– 03.** குளித்தலை நகராட்சி அலுவலக கணனி உபயோகத்திற்கான டோனர், கார்ட்ரிட்ஜ் ஆகிய உபகரணங்கள் ஓராண்டிற்கு சப்ளைசெய்தல் பணி மேற்கொள்ள, நாள்–05.02.2020.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 10.02.2020 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண் | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒன்றின் விலைப்புள்ளி தொகை | | |
|---|---|---|---|---|
| | | கோல்டன் இன்போடெக், கே.புதூர், மதுரை–7. | லேப்ஒன் சொல்யூசன், டவுன்ஹால்ரோடு, மதுரை–1 | எச்ஜஎல் டெக்னாலஜிஸ், பழையகுயவர்பாளையம் ரோடு, மதுரை–9. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1) | 88ஏ டோனர் கார்ட்ரிட்ஜ் | ரூ.1652/– | ரூ.2500/– | ரூ.2700/– |
| 2) | 28ஏ டோனர் கார்ட்ரிட்ஜ் | ரூ.5500/– | ரூ.6000/– | ரூ.6900/– |
| 3) | எப்சன் எல்3110 பிரிண்டர் கலர் டோனர் | ரூ.4750/– | ரூ.5750/– | ரூ.5950/– |

**அலுவலக குறிப்பு–** மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள வரிசை எண்.1.ல் ஆன கோல்டன் இன்போடெக் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மற்றும் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.174/2020/இ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சி அலுவலக ஜெனரேட்டர் பயன்பாட்டிற்கான Exide 12 Volt, 80AH பேட்டரி சப்ளை செய்தல் பணி மேற்கொள்ள அவசர அவசியம் கருதி, நாள்–05.02.2020.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று 10.02.2020 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி, 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி அலுவலக ஜெனரேட்டர் பயன்பாட்டிற்கான Exide 12 Volt, 80AH பேட்டரி சப்ளை செய்தல் | 1). M/s.Sri Madura Powers, 7B-Vaiganallur Elementary School Street, Kadambarkovil, Kulithalai. | 7,100/– |
| | | 2). M/s.Green Power Care, 43-1st Floor Nataraja Complex, Old Bus-stand, Musiri. | 8,000/– |
| | | 3). M/s.Radar Power System, 175-Sardhar Vallapaipatelstreet, Tennur, Trichy. | 8,200/– |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s.Sri Madura Powers நிறுவனத்தின் வரிசை 1.ல் ஆன விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்ற் பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.154/2020/இ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கையாக 2019–2020.ஆம் ஆண்டிற்கான கிருமி நாசினி பொருள்கள் பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்புத்தூள், ஆசிட், பினாயில் மற்றும் லெமன் கிராஸ் பினாயில் வாங்குவதற்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 25.02.2020.ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | கிருமிநாசினி பொருள்கள் | நிறுவனங்களின் பெயர் | |
|---|---|---|---|
| | | AK Enterprise | Chendur Enterprises |
| | | 1.கிலோ/1.லிட்டர் விலை (ரூ.) | 1.கிலோ/1.லிட்டர் விலை (ரூ.) |
| 1) | பிளீச்சிங் பவுடர் | 55.00 | 53.00 |
| 2) | சுண்ணாம்புத்தூள் | 16.00 | 14.00 |
| 3) | ஆசிட் | 38.00 | 34.00 |
| 4) | பினாயில் | 56.00 | 56.00 |
| 5) | லெமன் கிராஸ் பினாயில் | 1950.00 | 1900.00 |

அலுவலக குறிப்பு– வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Chendur Enterprises, Trichy-1 நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.184/2020/எச்1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5370.ன் தகுதிச்சான்று பெற பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.1.10 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நாள்–05.02.2020.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 24.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | நிறுவனத்தின் பெயர் | குறிப்பிட்டுள்ள தொகை |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு லாரி TN-47-AS-5370.ன் தகுதிசான்று பெற பழுது நீக்கம் செய்தல் | 1). லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர்டேம்–636 401. | ரூ.104965/– |
| | | 2). ஜே.வி.கே.ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், சாலராம்பட்டி மெயின்ரோடு, சேலம் | ரூ.110600/– |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர்டேம் நிறுவன ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசிம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதிபெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2855/2019/எச்1)

..3..

பொருள்– 07. குளித்தலை நகராட்சிப் பகுதியில் அண்ணாநகர் கலப்புக்காலனி வடக்கு மெயின்ரோடு மற்றும் அண்ணாநகர் பழைய நகராட்சி ரோடு, தார்சாலை பராமரிப்பு பணிக்கு ரூ.15.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.207, நாள்–06.01.2020.ல் அனுமதி பெற்று, 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 1 ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | அண்ணாநகர் கலப்புக்காலனி வடக்கு மெயின்ரோடு மற்றும் அண்ணாநகர் பழைய நகராட்சி ரோடு தார்சாலை பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், 55–புனிதா காம்ப்ளெக்ஸ், பஸ் ஸ்டாண்டு, குளித்தலை. | 4.99% அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு கூடுதலாக இருந்த காரணத்தினால், ஒப்பந்தப்புள்ளியை குறைப்புசெய்து கொடுக்கும்படி (Negotiation) குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை குறைத்து வழங்குமாறு 03.02.2020 அன்று இவ்வலுவலகத்தில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி, ஒப்பந்ததாரர் M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், மேற்கண்ட கடிதத்திற்கு கட்டுமான பொருட்கள், சாலை மற்றும் கட்டிட பணியாளர்கள் கூலி ஆகியவை விலையேற்றம் காரணமாக இனி குறைக்க இயலாது என இறுதிசெய்து பதில் கடிதம் வழங்கியுள்ளார். எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மேற்குறிப்பிட்ட சாலைப்பணிகள் அரசின் திட்டப்பணி என்பதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரும்பட்சத்தில், கால விரயம் மற்றும் பொருள் விரயம் ஏற்படும் என்பதால், அவசர அவசியம் கருதி உடன் பணிகளை முடிக்கப்பட வேண்டியுள்ளது.

2). நகராட்சி நிர்வாகம், பொறியாளர் கையேடு தொகுதி–I, பத்தி 2.7.2 பக்கம் எண்.9.ல், பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விகிதத்திற்கு 5% வரை கூடுதலாக முதல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பிலேயே வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கட்டுமான பொருட்கள் விலையேற்றத்தினாலும், கட்டுமான தொழிலாளர்கள் கூலியேற்றத்தினாலும், மதிப்பீட்டிற்கு 4.99% கூடுதலாக வழங்கியுள்ள M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3). அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.15/2020/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சிப் பகுதியில் அண்ணாநகர் பிள்ளையார்கோவில்தெரு மற்றும் ராஜாஜிதெரு தார்சாலைகள் பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.35.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.207, நாள்–06.01.2020.ல் அனுமதி பெற்று, 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | அண்ணாநகர் பிள்ளையார்கோவில்தெரு மற்றும் ராஜாஜிதெரு தார்சாலைகள் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 1). திரு.R.N.வெங்கடாஜலபதி, சௌண்டீஸ்வரிஅம்மன்கோவில்தெரு,குளித்தலை. | 4.98% அதிகம். |
| | | 2). M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், 55–புனிதா காம்ப்ளெக்ஸ், பேருந்து நிலையம், குளித்தலை. | 5.56% அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு கூடுதலாக இருந்த காரணத்தினால், ஒப்பந்தப்புள்ளியை குறைப்புசெய்து கொடுக்கும்படி (Negotiation) குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.R.N.வெங்கடாஜலபதி, அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை குறைத்து வழங்குமாறு 03.02.2020 அன்று இவ்வலுவலகத்தில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி, ஒப்பந்ததாரர் திரு.R.N.வெங்கடாஜலபதி, மேற்கண்ட கடிதத்திற்கு கட்டுமான பொருட்கள், சாலை மற்றும் கட்டிட பணியாளர்கள் கூலி ஆகியவை விலையேற்றம் காரணமாக இனி குறைக்க இயலாது என இறுதிசெய்து பதில் கடிதம் வழங்கியுள்ளார். எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1). மேற்குறிப்பிட்ட சாலைப்பணிகள் அரசின் திட்டப்பணி என்பதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரும்பட்சத்தில், கால விரயம் மற்றும் பொருள் விரயம் ஏற்படும் என்பதால், அவசர அவசியம் கருதி உடன் பணிகளை முடிக்கப்பட வேண்டியுள்ளது.

2). நகராட்சி நிர்வாகம், பொறியாளர் கையேடு தொகுதி–I, பத்தி 2.7.2 பக்கம் எண்.9.ல், பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விகிதத்திற்கு 5% வரை கூடுதலாக முதல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பிலேயே வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கட்டுமான பொருட்கள் விலையேற்றத்தினாலும், கட்டுமான தொழிலாளர்கள் கூலியேற்றத்தினாலும், மதிப்பீட்டிற்கு 4.98% கூடுதலாக வழங்கியுள்ள திரு.R.N.வெங்கடாஜலபதி, ஒப்பந்ததாரா் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3). அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலா் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.15/2020/இ1)

பொருள்– 09.

குளித்தலை நகராட்சிப் பகுதியில் கலப்புக்காலனி மற்றும் அண்ணாநகர் குறுக்கு சாலைகள் தார்சாலை பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.35.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.207, நாள்–06.01.2020.ல் அனுமதி பெற்று, 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரா் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | கலப்புக்காலனி மற்றும் அண்ணாநகர் குறுக்கு சாலைகள் தார்சாலை பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 1). M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், 55–புனிதா காம்ப்ளெக்ஸ், பேருந்து நிலையம், குளித்தலை. | 4.99% அதிகம். |
| | | 2). திரு.R.N.வெங்கடாஜலபதி, சௌண்டீஸ்வரிஅம்மன்கோவில்தெரு,குளித்தலை. | 5.32% அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு கூடுதலாக இருந்த காரணத்தினால், ஒப்பந்தப்புள்ளியை குறைப்புசெய்து கொடுக்கும்படி (Negotiation) குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரா் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை குறைத்து வழங்குமாறு 03.02.2020 அன்று இவ்வலுவலகத்தில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி, ஒப்பந்ததாரா் M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், மேற்கண்ட கடிதத்திற்கு கட்டுமான பொருட்கள், சாலை மற்றும் கட்டிட பணியாளர்கள் கூலி ஆகியவை விலையேற்றம் காரணமாக இனி குறைக்க இயலாது என இறுதிசெய்து பதில் கடிதம் வழங்கியுள்ளார். எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1). மேற்குறிப்பிட்ட சாலைப்பணிகள் அரசின் திட்டப்பணி என்பதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரும்பட்சத்தில், கால விரயம் ஏற்படும் என்பதால், அவசர அவசியம் கருதி உடன் பணிகளை முடிக்கப்பட வேண்டியுள்ளது.

2). நகராட்சி நிர்வாகம், பொறியாளர் கையேடு தொகுதி–I, பத்தி 2.7.2 பக்கம் எண்.9.ல், பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விகிதத்திற்கு 5% வரை கூடுதலாக முதல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பிலேயே வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கட்டுமான பொருட்கள் விலையேற்றத்தினாலும், கட்டுமான தொழிலாளர்கள் கூலியேற்றத்தினாலும், மதிப்பீட்டிற்கு 4.99% கூடுதலாக வழங்கியுள்ள M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரா் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3). அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலா் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.15/2020/இ1)

பொருள்– 10.

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு டெங்கு தடுப்பு பணிக்காக 2019–2020.ஆம் ஆண்டுக்கான கிருமி நாசினி பொருள்கள் பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்புத்தூள், ஆசிட், பினாயில் மற்றும் லெமன் கிராஸ் பினாயில் ஆகிய கிருமி நாசினி பொருள்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

இச்செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.184/2020/எச்1)

பொருள்–11. குளித்தலை நகராட்சிப் பகுதியில் அண்ணாநகர் பைபாஸ்ரோடு மற்றும் அண்ணாநகர் ஆறாவதுதெரு மேற்புறம் தார்சாலை பராமரிப்பு பணிக்கு ரூ.35.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.207, நாள்–06.01.2020.ல் அனுமதி பெற்று, 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | அண்ணாநகர் பைபாஸ் ரோடு மற்றும் அண்ணாநகர் ஆறாவது தெரு மேற்புறம் தார்சாலை பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | திரு.சி.கண்ணன், 37,ராசாக்கவுண்டனூர், உப்பிடமங்கலம் அஞ்சல், கரூர் – 639 114. | 4.98% அதிகம். |
| | | M/s.சக்தி இன்ஜினியரிங், ஒப்பந்ததாரர், 4/72,தாளியாபட்டி அஞ்சல், வெள்ளியணை, கரூர்–639 118. | 5.97% அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு கூடுதலாக இருந்த காரணத்தினால், ஒப்பந்தப்புள்ளியை குறைப்புசெய்து கொடுக்கும்படி (Negotiation) குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.சி.கண்ணன், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை குறைத்து வழங்குமாறு 03.02.2020 அன்று இவ்வலுவலகத்தில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி, ஒப்பந்ததாரர் திரு.சி.கண்ணன், மேற்கண்ட கடிதத்திற்கு கட்டுமான பொருட்கள், சாலை மற்றும் கட்டிட பணியாளர்கள் கூலி ஆகியவை விலையேற்றம் காரணமாக இனி குறைக்க இயலாது என இறுதிசெய்து பதில் கடிதம் வழங்கியுள்ளார். எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மேற்குறிப்பிட்ட சாலைப்பணிகள் அரசின் திட்டப்பணி என்பதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரும்பட்சத்தில், கால விரயம் ஏற்படும் என்பதால், அவசர அவசியம் கருதி உடன் பணிகளை முடிக்கப்பட வேண்டியுள்ளது.

2). நகராட்சி நிர்வாகம், பொறியாளர் கையேடு தொகுதி–I, பத்தி 2.7.2 பக்கம் எண்.9.ல், பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விகிதத்திற்கு 5% வரை கூடுதலாக முதல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பிலேயே வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கட்டுமான பொருட்கள் விலையேற்றத்தினாலும், கட்டுமான தொழிலாளர்கள் கூலியேற்றத்தினாலும், மதிப்பீட்டிற்கு 4.98% கூடுதலாக வழங்கியுள்ள திரு.சி.கண்ணன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3). அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.15/2020/இ1)

பொருள்–12. குளித்தலை நகராட்சி ஜெய்மகால் அவென்யூ பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தில் நுண்உரக்கிடங்கு அமைக்க மதிப்பீடு ரூ.35.24 லட்சத்தில் தயார்செய்து பணி நிறைவுபெறும் நிலையில் உள்ளது. இம்மதிப்பீட்டில் Structural Design–ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு Steel Structure அளவுகள் மற்றும் கம்பிகளின் அளவுகள் கூடுதலாக, அதாவது மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள அளவைவிட கூடுதலாக பணி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் கட்டிட பணிக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.35.24 லட்சம் போதுமானதாக உள்ளது. எனவே, கீழ்க்குறிப்பிட்ட பணிகள் உடன் முடிக்கப்பட வேண்டியுள்ளதால், அவசர அவசியம் கருதியும் கீழ்க்குறிப்பிட்ட பணிகளை செய்தால்தான் MCC மையத்திற்குள் குப்பைகள் கொண்டு செல்ல இயலும் என்பதால், இக்குறிப்பிட்ட பணிகளை உடன் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.4.90 லட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.

2). செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.74/2020/இ1)

பொருள்– 13. இந்நகராட்சி பொது சுகாதாரப் பணிகளுக்கு 52–துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் விநியோகம் செய்யும் பணிக்கு 29.01.2020.ல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விடுக்கப்பட்டது.

1). Thiru.C.Kannan, Karur.

2).Amman Constructions, Kulithalai..

மேற்கண்ட நிறுவனங்களில் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதிகளை நிறைவு செய்யும் விதத்தில் இருந்ததால், மேற்படி நிறுவனத்தின் விலை ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டது. மேற்படி நிறுவனங்கள் கீழ்க்குறிப்பிட்டவாறு தனது விலையினை தெரிவித்துள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | நபர் ஒருவருக்கு குறிப்பிட்ட விலை |
|---|---|---|
| 1) | Thiru.C.Kannan, Karur. | ரூ.498.00 |
| 2) | Amman Constructions, Kulithalai. | ரூ.501.00 |

மேற்குறிப்பிடப்பட்ட விலையின்படி Thiru,C,Kannan, Karur. என்பவரின் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி, தொழில்நுட்ப தகுதிகளை நிறைவுசெய்யும் விதத்திலும் மற்றும் நபர் ஒருவருக்கு குறிப்பிட்ட விலை ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை தெரிவித்துள்ளது. இதன்படி, 52–நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.498.00 வீதம் வருடம் ஒன்றிற்கு ரூ.94,52,040/– ஆகும்.

மன்றத் தீர்மானத்தில், மேற்படி பணிக்கு கீழ்க்கண்டவாறு உத்தேச செலவினம் ரூ.94,54,583.32–க்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழ்க்குறிப்பிட்டவாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு கூலி ரூ.364/– வீதம் 52 நபர்களுக்கு 365.நாட்களுக்கு | | 6908720.00 |
| 2) | கூடுதல் 10–சதவீதம் (ESI., EPF, காப்பீடு, சீருடைகள், சுகாதார மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் | | 0 |
| | ESI 30% | 328164.20 | 0 |
| | EPF 30% | 905042.32 | 0 |
| | Uniforms 20% | 207261.60 | 0 |
| | Health, Safety Equipments 20% | 276348.80 | 0 |
| | | 1716816.92 | 1716816.92 |
| 3) | கூடுதல் 5–சதவீதம் சேவை வரி | | 0 |
| 4) | கூடுதல் 1–சதவீதம் நிர்வாக செலவினம் | | 690872.00 |
| 5) | ஆயுள் காப்பீடு | | 138174.40 |
| | ஆகமொத்தம் | | 2545863.32 |

| விபரங்கள் | மன்றத் தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்ட சதவீதம் | பணியாளர்களுக்கு அடிப்படை வசதிகள், நிர்வாக செலவினத்திற்கு செலுத்த வேண்டிய சதவீதம் | ரூ.364/– நாள் ஒன்றுக்கு என்ற அடிப்படையில் | மொத்தம் வருடத்திற்கு (ரூபாய்) |
|---|---|---|---|---|
| ESI | 30% | 4.75 % | 17.29 | 328164.20 |
| EPF | 30% | 13.10 % | 47.68 | 905042.32 |
| Uniforms | 20% | 3.00 % | 10.92 | 207261.60 |
| Safety equipment | 20% | 4.00 % | 14.56 | 276348.80 |
| Administrative charges | 01% | 10.00 % | 36.40 | 690872.00 |
| Insurance | 0 | 2.00% | 7.28 | 138174.40 |
| Service Tax | 05% | 0 | 0 | 0 |
| Total | | | 134.13 | 2545863.32 |

மேற்குறிப்பிட்ட அடிப்படை மதிப்பீட்டில் சேர்க்க வேண்டியுள்ளது. அதன் விபரம்

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டுத் தொகை | = | 6908720.00 |
| கலம் 3.ன்படி மதிப்பீட்டிற்கு | = | 2545863.32 |
| மொத்தம் | = | 9454583.32 |

மத்திய அரசின் நிதி (வருவாய்) துறையின் சுற்றறிக்கை எண்.25/2012 (சேவைவரி) சேவை வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, திருத்தப்பட்ட மதிப்பீட்டில் சேவை வதித் தொகையினை நீக்கம் செய்யலாம்.

..7..

52–துப்புரவு பணியாளர்களை வேலை நேரடியாக நியமனம் செய்தால் கீழ்க்கண்டவாறு உத்தேச செலவு ஏற்படும்.

துப்புரவு பணியாளர் ஒருவருக்கு கீழ்க்கண்டவாறு ஊதியம் வழங்க வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அடிப்படை ஊதியம் | ரூ. | 15700 | | |
| அகவிலைப்படி | ரூ. | 1413 | | |
| வீட்டுவாடகைப்படி | ரூ. | 500 | | |
| மருத்துவப்படி | ரூ. | 300 | | |
| இதரப்படி | ரூ. | 200 | | |
| மொத்தம் | ரூ. | 18113 | x 52 Nos x 12 months = | Rs. 11302512.00 |

| | | |
|---|---|---|
| அ) | மேற்குறிப்பிடப்பட்ட 52 துப்புரவு பணியாளர்களை ஒப்புதலை பெற்று நியமனம் செய்தால் ஆண்டு ஒன்றுக்கு செலவு | ரூ.11302512.00 |
| ஆ) | ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள விலை ஒப்பந்தப்புள்ளியின்படி ஆகும் செலவுத் தொகை | ரூ.9452040.00 |
| இ) | ஒப்பந்த அடிப்படையில் 52 துப்புரவு பணிக்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை திருத்தப்பட்டது வருடத்திற்கு | ரூ.9454583.32 |
| ஈ) | திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கும், புதியதாக துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்தால் ஏற்படும் வித்தியாசத் தொகை | ரூ.1850472.00 |
| உ) | திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கும், ஒப்பந்தப்புள்ளி விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகை | ரூ.2543.32 |

எனவே, குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Thiru.C.Kannan, Karur. நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியை முடிவுசெய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1). பொது சுகாதார அவசர அவசியம் கருதி கூடுதல் செலவினத்திற்கும் ஒப்புதல் வழங்கலாம்.

2). பொது சுகாதார பணியின் அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3). ESI., EPF, காப்பீடு, சேவை வரி போன்ற இனங்களுக்கு அவ்வப்போது அரசால் நடைமுறைப்படுத்தப்படும் தொகைகளை செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4). ஒருவருட ஒப்பந்த காலம் முடிவடைந்தபின், தேவைக்கேற்பவும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதித்த சதவிகிதத்தில் ஒப்பந்தத்தை நீட்டித்துக்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

5).அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.24/2020/எச்1)

பொருள்– 14.

குளித்தலை நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்மூலம் 52 தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிமேற்கொள்ள திரு.சி.கண்ணன், ஒப்பந்ததாரர், கரூர் அவர்களுக்கு 05.02.2020.ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேலும், ஒப்பந்ததாரர் இந்நகராட்சிக்கு வழங்கவேண்டிய வங்கி உத்தரவாதத்தை, ஒப்பந்த நிபந்தனைகளில் அறிவுறுத்தியவாறு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சமர்ப்பிக்கவில்லை. இப்பொருள் தொடர்பாக பலமுறை நினைவூட்டுகள் வழங்கப்பட்டும், ஒப்பந்ததாரர் எவ்வித தகவலும் அளிக்கவில்லை என்பதால், அன்னாருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்த உத்தரவினை 21.02.2020.ல் ரத்து செய்யப்பட்டது. தற்போது இந்நகராட்சியில் துப்புரவு பணியாளாகள் அளவுகோலின்படி இல்லை என்பதாலும், தற்போதுள்ள பணியாளர்களை கொண்டு நகரின் திடக்கழிவு மேலாண்மை பணிகளை திறம்பட மேற்கொள்ள இயலாது என்பதால், இத்தனியார்மயமாக்கல் திட்டம்மூலம் பணிகள் மேற்கொள்வது அத்தியாவசியமாக உள்ளது. எனவே, தனியார்மயமாக்க திட்ட ஒப்பந்த பணியில், 29.01.2020.ஆம் நாளில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில், திரு.சி.கண்ணன் என்பருக்கு அடுத்தபடியாக, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று, 21.02.2020 முதல் 20.02.2021 வரை பணிமேற்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1). மேற்கண்ட பணிக்கு குறைந்த விலைப்புள்ளியை மதிப்பீட்டைவிட கூடுதலாக ரூ.501/– வழங்கியுள்ள M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், குளித்தலை என்னும் நிறுவனத்திடம் விலையை குறைத்துக்கொடுக்க கோரியதில், தற்பொழுது நடைமுறையில் இதைவிட கூடுதலாக கூலி வழங்கப்பட்டு வருவதால், இதைவிடக் குறைத்து கொடுக்க இயலாது என்று தெரிவித்துள்ளனர். எனவே, மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் நகராட்சிக்கு ஏற்படும் பொருள் விரயம் மற்றும் கால விரயம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், பொதுமக்கள் நலன் மற்றும் அவசர அவசியம் கருதியும் இந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2). ஏற்கனவே இந்நகராட்சி மன்ற தீர்மானம் எண்.217, நாள்–.31.01.2020.ல் அனுமதிக்கப்பட்டுள்ள ரூ.94,54,583/– தொகையை காட்டிலும் கூடுதலாக செலவிடப்பட வேண்டிய தொகை ரூ.54,396.68–க்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3). இத்தொகையினை 14.வது நிதிக்குழு மான்யத் தொகையில் செலவு செய்துகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.24/2020/எச்1)

*******

# குளித்தலை நகராட்சி

28.02.2020.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 226 | அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 227 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 3 | 3 | 228 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 4 | 4 | 229 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 5 | 5 | 230 | ஏற்கப்பட்டது. |
| 6 | 6 | 231 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | 7 | 232 | ஏற்கப்பட்டது. |
| 8 | 8 | 233 | ஏற்கப்பட்டது. |
| 9 | 9 | 234 | ஏற்கப்பட்டது. |
| 10 | 10 | 235 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 11 | 11 | 236 | ஏற்கப்பட்டது. |
| 12 | 12 | 237 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 238 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 14 | 14 | 239 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–ந.புகழேந்தி,
நகராட்சி பொறியாளர்,
ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.